# பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்வி (Early French Immersion)

tdsb French

## பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்வி (Early French Immersion) என்றால் என்ன?

பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்வி (Early French Immersion) என்பது பாலர் வகுப்பில் ஆரம்பித்து தரம் 12 வரை தொடரும் பிரெஞ்சு மொழியிலான ஒரு தீவிர கல்வித் திட்டமாகும். தரம் JK முதல் தரம் 3 வரை நிகழும் வகுப்புச் செயற்பாடுகள் யாவும் பிரெஞ்சு மொழியிலேயே நடாத்தப்படுகின்றன. ஒரு சிறப்புப்பாடம் (உ+ம். சுகாதாரம் மற்றும் உடற்கல்வி) ஆங்கிலத்தில் கற்பிக்கப்படக்கூடும். தரங்கள் 4-8 இல் இந்தத் திட்டத்தில் 50% பிரெஞ்சு மொழியிலும் 50% ஆங்கிலத்திலும் கற்பிக்கப்படுகின்றது.

**எவரால் விண்ணப்பிக்க முடியும்?**

பாலர் வகுப்பில் சேரும் அனைத்துப் பிள்ளைகளும் பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்விக்கு (Early French Immersion) விண்ணப்பிப்பதற்குத் தகுதி உடையவர்கள்.

## பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்வி (Early French Immersion) எவருக்காக?

✓ பிரெஞ்சு மொழி தவிர்ந்த வேறொரு மொழியை வீட்டில் பேசும் குடும்பத்தவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது.

✓ மாணவர்கள் அனைவரும் பிறிதொரு மொழியைக் கற்க வல்லவர்கள் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம், எனவே சகலவிதமான கற்றல் முறை மற்றும் மொழிப் பின்னணி உள்ள அனைத்து மாணவர்களும் இந்தத் திட்டத்துக்கு வரவேற்கப்படுவதுடன் ஆதரவளிக்கப்படுகிறார்கள்.

✓ பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்வித் திட்டம் (Early French Immersion program) பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பில் ஆர்வமுள்ள குடும்பத்தவர்கள் அனைவருக்கும் பொருத்தமானதாக இருக்கிறது




## பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்வித் திட்டத்தின் (Early Immersion Program) நன்மைகள்

மாணவர் எந்த மொழியைப் பின்புலமாகக் கொண்டிருந்தாலும், பிரெஞ்சு மொழியில் அவர்கள் உயர் மட்டத் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆரம்பகால பிரெஞ்சு மொழியிலான கல்வித் திட்டம் (Early French Immersion program) உதவிசெய்கிறது. இன்னொரு மொழியை இந்த வழியில் படிப்பது பின்வருவன உள்ளடங்கலான பல நன்மைகளையும் மாணவர்களுக்கு வழங்குகிறது:

✓ வேறொரு மொழியிலான கற்றல் மாணவர்களின் முதன்மை மொழியில் அவர்களின் திறன்களை மேம்படுத்துவது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

✓ அவர்களின் கற்கையின் சகல பகுதிகளுக்கும் மாணவர்கள் பிரயோகிக்கவேண்டிய மேம்பட்ட சிந்தனைத் திறன் மற்றும் கற்றல் திறன் போன்ற அறிவாற்றலுடன் தொடர்பான ஏனைய நன்மைகளை மொழிக் கற்கை வழங்குகிறது.

✓ ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் இருக்கும் தேர்ச்சி, எதிர்காலத்தில் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களை அதிகமாக்குவதுடன் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் அடையாளங்கள் பற்றிய விழிப்புணர்வை வளர்க்கிறது.

✓ இருமொழிகளில் கற்கும் மாணவர்கள் வலுவான தொடர்பாடல் திறன்களை ஒட்டுமொத்தமாக வளர்த்துக் கொள்கிறார்கள், அத்துடன் இன்னொரு மொழியையும் அவர்கள் மிகவும் இலகுவாகக் கற்கக்கூடும்.

## விண்ணப்பம் பற்றிய தகவல்கள்

ஆரம்பகால பிரெஞ்சு மொழியிலான கல்வித் (Early French Immersion) திட்டத்துக்கு விண்ணப்பிக்கும் முறை பற்றிய தகவல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/French.

ஆரம்பகால பிரெஞ்சு மொழியிலான கல்வித் (Early French Immersion) திட்டத்துக்கு விண்ணப்பிக்கும் காலம் தற்போது, ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர்** மாதமாக உள்ளது. குறிப்பிட்ட ஆண்டிற்கான விண்ணப்பக் காலக்கெடு தொடர்பான தகவல்களுக்குத் தயவுசெய்து செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

தகுதிவாய்ந்த இணைய விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் திட்டத்தில் இடம் வழங்கப்படுவது உறுதிசெய்யப்படும் என்பதையும் குறிப்பிட்டதொரு பாடசாலையில் இடம் **கிடைக்குமெ**ன்பதற்கான உத்தரவாதம் கிடைக்கமாட்டாது என்பதையும் கவனித்தல் முக்கியமானது.

# பிரெஞ்சு மொழியிலான ஆரம்பகாலக் கல்வி (Early French Immersion)

tdsb French

## ஆய்வு என்ன சொல்கிறது?

"FI இல் உள்ள மாணவர்கள் பிரெஞ்சு மொழியில் மேம்பட்ட தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளையில், இதே உள்ளடக்கத்தை ஆங்கிலத்தில் படிக்கும் மாணவர்களுக்குச் சமமான தேர்ச்சியையும் (விஞ்ஞானம், சமூகவியல், கணிதம் போன்றவை) பெற்றுக்கொள்கிறார்கள்." **(Wesche, 2002)**

கனடாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், ஆங்கிலத்தில் பரீட்சிக்கப்பட்டபோது, EFI அல்லது MFI ஆரம்பப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூகவியல் பாடங்களை பிரெஞ்சு மொழியில் பயின்ற மாணவர்களின் அடைவுகளில் எதிர்மறையான விளைவுகள் எதுவுமிருக்கவில்லை என்பதைக் கண்டறிந்திருக்கின்றன. **(Wesche, 2002)**

ஒரு பிள்ளையின் முதல் மொழி ஒரு சமூகரீதியான மொழியாக இருக்காவிட்டாலும்கூட, பிள்ளைகள் ஆங்கிலத்தை ஓர் இரண்டாம் மொழியாகக் கற்கும் அதேவேளையில் பிரெஞ்சு போன்ற இன்னொரு மேலதிக மொழியையும் வெற்றிகரமாகக் கற்றுக்கொள்ள முடியும். **(O'Brien, 2017)**

பிரெஞ்சு மொழியிலான கற்றல் திட்டங்களில் சேர்ந்திருக்கும் மாணவர்களின் வாசிப்புத் திறன் அந்தத் திட்டத்தில் இல்லாத அவர்களின் சகாக்களை விடச் சிறப்பாக இருப்பதைத் தரவுகள் காட்டுகின்றன.
**https://www150.statcan.gc.ca/n1/daily-quotidien/040322/dq040322a-eng.htm**

## உசாத் துணை நூல்கள்


Wesche, M.B. (2002) Early French Immersion: How has the original Canadian model stood the test of time? An Integrated View of Language Development, Petra Burmeister, Thorsten Piske, and Andreas Rohde (Eds), WVT Wissenschaftlicher Verlag Trier.
www.fmks-online.de/_wd_showdoc.php?pic=865

Statistics Canada, (2004) Student Reading Performance in Minority Language Schools.
https://www150.statcan.gc.ca/n1/daily-quotidien/040322/dq040322a-eng.htm

O'Brien (2017) Literature Review on the Impact of Second Language Learning, Canadian Association of Second Language Teachers.